1995 ஏப்ரல் 24]

என்பது அவரவர்கள் குடியிப்புப் பகுதிகளுக்கு அருகில் புறம்போக்கு நிலத்தில் பட்டா கொடுத்து இலவசமாக வழங்குகிறோம் என்று சொல்லிவிடுவார்கள். ஆதி திராவிடர் நலன் காக்கும் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றபிறகு வளர்ந்து வரும் ஜனத்தொகையைக் கணக்கில் கொண்டு புதிதாக தனியார்களிடம் இருந்து நிலங்களை விலைக்கு வாங்கி, பட்டா வழங்குதல் தற்போது அதிகமாக இருக்கிறது. எனது தொகுதியில் ஏறத்தாழ 15 கிராமங்களுக்கு அப்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. அண்ணாமலை நகரியம் கொத்தங்குடிதோப்பு என்பது ஆதிதிராவிடர் அல்லாத மக்கள் வாழும் பகுதி. அவர்களுக்கு குடியிருக்கும் இடத்திலேயே பட்டா தந்தால் நலம் பயக்கும். மற்றும் திருவேட்களம் என்ற இடத்தில் அதிகப்படியான ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். ஒரே இடத்தில் 2, 3 குடும்பங்கள் கூட வாழ்கிறார்கள். இந்த இடப்பற்றாக்குறையைப் போக்க அங்கே இருக்கும் நிலச் சொந்தக்காரர்களுள் ஒருவர் இம்மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி, தன்னுடைய நிலத்தை அரசுக்குக் கொடுக்க ஒப்புதல் தந்துள்ளார். அந்த நிலம் விரைவில் வாங்கப்பட்டு பட்டா பகிர்ந்து அளிக்க்ப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறுகின்ற வகையில் நிலச் சொந்தக்காரர் நிலம் கொடுக்க ஒப்புதல் தந்தால் தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் அந்த நிலத்தை எடுப்பதற்கு சட்டத்தில் வழி இருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் இதிலே ஒத்துழைப்பை நல்கி அந்த நிலச் சொந்தக்காரர், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரியை அணுகும்படி செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 420, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

420—

பத்மநாபபுரம் கோட்டையைப் புதுப்பித்தல்

***17508**—*டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:*

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் கோட்டையில் உள்ள கட்டிடங்களைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1995 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள பத்மநாபபுரம் அரண்மனை கேரள மாநில அரசின் நேரடி நிர்வாகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் கோட்டை என்பது மிகப் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலா மையம். கி.மு. 1333 ஆம் ஆண்டு வரையில் திருவிதாங்கூர் அரசின் தலைநகரமாக இருந்து வந்துள்ளது. இந்தக் கோட்டை சுமார் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதிலே ஒரு அருங்காட்சியகமும், இரண்டு கோவில்களும் உள்ளன. இங்கேயுள்ள அருள்மிகு சிவன் கோவில் திராவிட கலாச்சாரத்தை பிரதிபலிக்கிறது. இங்கேயுள்ள அருள்மிகு இராமசாமி திருக்கோவில் திருவிதாங்கூர் மக்களின் கட்டிடக் கலையை, கலாச்சாரத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. சிறப்பான மர வேலைப்பாடுள்ள பொருள்கள், சிற்பங்கள் இங்கே உள்ளன. இராமாயணத்தை முழுவதுமாக 45 மரத்தாலான பலகைகளில் கண்களைக் கவரும் வகையில் பொருத்தி இருக்கிறார்கள். வருஷம்-16 என்னும் திரைப்படம் முழுக்க முழுக்க இந்தக் கோட்டையில் தான் எடுக்கப்பட்டது. இது ஒரு கலைப் பொக்கிஷம். ஆகவே, இவ்வளவு சிறப்புமிக்க இந்தக் கோட்டையை பாதுகாக்க, நிர்வாக வசதியை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு கேரள அரசிடமிருந்து இந்த நிர்வாகத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் பத்மநாபபுரம் அரண்மனையைப் பார்க்கச் செல்கிறார்கள். எனவே, நமது மாநிலத்திற்கு வருகிற இந்த சுற்றுலாப் பயணிகளிடமிருந்து அந்த நுழைவுக் கட்டணத்தை கேரள அரசு வசூலித்துக் கொண்டிருக்கிறது. எனவே, தற்போது நம்முடைய மாநில அரசால் அந்த அரண்மனையை, அது கேரள அரசினுடைய நிர்வாகத்தில் இருப்பதால், பராமரிக்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில் தற்போது அரசுக்கு அவர் எந்தெந்தப் பகுதிகள் பராமரிக்கப்பட வேண்டுமென்று எழுதிக் கொடுப்பாரேயானால் கேரள அரசுக்கு மாநில அரசு கோரிக்கை வைத்து பராமரிக்க முயற்சி மேற்கொள்ளும். அதைப்போல மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மற்றொரு கோரிக்கையை அரசு தீவிரமாக ஆராய்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று அந்தக் கருத்துரு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.